விஷயங்களைப் பரிசீலித்துப் பார்த்து, திருநெல்வேலி, பெரம்பலூர் கோயம்புத்தூர் (இரண்டாவது தீ அணைப்பு நிலையம்), திண்டிவனம் ஆகிய நகரங்கள் ஒவ்வொன்றிலும் 1964-65-ல் ஒரு தீ அணைப்பு நிலையத்தை நிறுவும் திட்டத்தை அரசாங்கம் அண்மையில் ஆலோசித்தது. ஆனால், தற்போதைய இக்கட்டான நிதிநிலை காரணமாக இத் திட்டத்தை அடுத்த ஆண்டில் மீண்டும் ஆலோசிப்பதென அரசாங்கம் முடிவு செய்தது.

* 597 கேள்வி.—திரு. சீ. சிவசுப்பிரமணியன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிதம்பரம் தாலுகாவிலுள்ள மேஜர் பஞ்சாயத்துக்களான காட்டுமன்னார்குடி; ஸ்ரீமுஷ்ணம்; பரங்கிப்பேட்டை முதலிய நகரங்களில் தீயணைக்கும் நிலையங்கள் திறப்பதற்கு உத்தேசமுண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : இல்லை.

ஹொகேனகல் மின்சார திட்டம்

* 598 கேள்வி.—திரு. வி. ஆர். பெரியண்ணன் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஹொகேனகல் மின்சார திட்டத்தின் தற்போதைய நிலை என்ன ?

(இ) இத் திட்டத்திற்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) & (இ) இத்திட்டம் தமிழ்நாடு, மைசூர் ஆகிய இரு மாநிலங்களுக்கும் சம்பந்தப்படுவதாகும். இந்த இரு மாநிலங்களும் இது குறித்து கடிதப் போக்குவரத்து நடத்தி வருகின்றன. நமது மாநில எல்லைகளுக்குள் இத்திட்டத்தைப் பற்றிய விரிவான பரிசீலனை ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாநில மின்சார போர்டு இத்திட்டத்திற்காக ரூ. 40 லட்சம் ஒதுக்கியுள்ளது.

தொல்பொருள் ஆராய்ச்சி

* 599 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) காஞ்சீபுரத்தில் உள்ள பாலிமேடு என்கிற பல்லவ மேட்டைச் சோதித்து தொல்பொருள் ஆராய்ச்சி நடத்த உத்தேசமுண்டா ?

(இ) ஆமெனில் அதன் விவரமென்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) No, Sir.

(b) Does not arise.